பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 4

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 11

முன்னுரை 13

1 நபிகளாரின் இறப்புக்குப் பின் ... 15

2 இறுதி உபதேசத்தின் மகத்துவம் 18

3 "அல்லாஹ்வுக்குப் பயப்படுங்கள் என்று உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்." 24

4 நிவாரணம் எது ? 31

5 நபிவழியைப் புறக்கணித்து குர்ஆனை மட்டும் சார்ந்திருப்பது கூடாது 37

6 நபித்தோழர்களிடம் பெற்றது நிச்சயமாகக் குர்ஆனிலிருந்தே பெற்றதுதான் 40

7 ஸுன்னத் ஒன்றா, இரண்டா ? 43

8 முஸ்லிம்கள் ஏராளமான கருத்து வேறுபாடுகளில் இருக்கும் காலத்தில், பித்அத்கள் குறித்து நமது நிலைப்பாடு என்ன ? 47

9 பித்அத்களில் நல்லவை, கெட்டவை என்று வகைப்படுத்தியவர்களுக்கு மறுப்பு 52

10 பித்அத்தின் அபாயம் 54

11 பித்அத்தைத் தடுப்பதே அண்ணலாரின் இறுதிக் கட்டளை 62

12 முடிவாக 64

பின்னிணைப்பு 65

பித்அத் ஹசனா உண்டா? 65

இறுதிப் பேருரை 71

2

இறுதி உபதேசத்தின் மகத்துவம்

✿

உள்ளம் முழுக்க பாசம் பொங்க ஒரு தாய் தன் பாசக்கார மகனை விட்டுப் பிரிந்து சென்றால், அந்த உணர்வு எப்படியிருக்கும்? தன் அன்புக்குப் பாத்திரமான பிள்ளைக்கு அதே அன்புக்குரிய ஒரு தந்தை மரணப் படுக்கையில் உணர்ச்சிப்பூர்வமாக இறுதி உபதேசம் செய்தால் எப்படியிருக்கும்? இந்த உணர்ச்சிகளைக் கற்பனை செய்து பாருங்கள்.

தெரிந்துகொள்ளுங்கள், இப்போது நாம் விவாதிக்கப் போவது இந்த எல்லா இறுதி உபதேசங்களைக் காட்டிலும் மகத்தானது. பெரும் துயரமானது. ஆம், அல்லாஹ்வின் தூதர் ﷺ தம் தோழர் களுக்கும் தமது சமுதாயத்திற்கும் இறுதி உபதேசம் சொன்னார்கள்.

என்ன உபதேசித்தார்கள் அவர்களுக்கு?

- இஸ்லாமியச் சட்டதிட்டங்களைப் பற்றியா?
- அதுவரை சொல்லப்படாத கொள்கை சம்பந்தப்பட்ட விஷயங்களை பற்றியா?
- அல்லது இஸ்லாமிய ஒழுக்கங்களில் ஒரு புதிய சட்டத்தையா?

விஷயம் இதையெல்லாம் விடக் கடுமையானது; முக்கியமானது.

மார்க்கம் முழுமை அடைந்துவிட்டது. அல்லாஹ்வின் அருளும் பூர ணமாகிவிட்டது. எனவே, இந்த உபதேசம் அனைத்தையும் உள்ள டக்கிய, எப்போதும் சொல்லப்பட வேண்டிய அரிய உபதேசம். வேண்டுமானால், எல்லா உபதேசங்களுக்கும் தாய் எனலாம்.

- நன்மையான, மகத்துவமான அனைத்தையும் அது தழுவி நிற்கிறது. தீமையான அனைத்தையும் எச்சரிக்கிறது.
- இந்த இறுதி உபதேசம் உங்களுக்கு இஸ்லாம், ஈமான், இஹ்சான் பற்றி இரத்தினச் சுருக்கமாகச் சொல்லித் தருகிறது.

4

நிவாரணம் எது ?

✿

فَعَلَيْكُمْ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ الْمَهْدِيِّينَ عَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ

"அப்போது நீங்கள் எனது வழிமுறையையும் எனக்குப் பின் வருகின்ற நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் வழிமுறையையும் பற்றிப்பிடித்துக்கொள்ளுங்கள். அதைக் கடைவாய்ப் பற்களால் பிடியுங்கள்."

❧

فَعَلَيْكُمْ بِسُنَّتِي

"எனது வழிமுறையைப் பற்றிப்பிடியுங்கள்."

அதாவது, என் வழிமுறைதான் உங்களுக்கு ஒளி; மருந்து; கருணை. அது குர்ஆனுக்கு விளக்கமாக, அதிலிருந்து புறப்பட்ட ஊற்றாக இருக்கிறது என்கிறார்கள். குர்ஆன், நபிவழியைப் பின்பற்றுபவர் வழிகெடுவது எப்படிச் சாத்தியம்?

تَرَكْتُ فِيكُمْ أَمْرَيْنِ لَنْ تَضِلُّوا مَا تَمَسَّكْتُمْ بِهِمَا كِتَابَ اللهِ وَسُنَّةَ نَبِيِّهِ

உங்களிடம் இரண்டு விஷயங்களை விட்டுச் செல்கிறேன். அந்த இரண்டையும் நீங்கள் பற்றிப் பிடித்திருக்கும் காலமெல்லாம் வழிகெடவே மாட்டீர்கள். அவை: அல்லாஹ்வின் வேதம், அவனுடைய தூதரின் வழிமுறை. (அறிவிப்பு: அனஸ் இப்னு மாலிக் ﷺ, மூவத்தா மாலிக் 3338, மிஷ்காத் 186, அஸ்ஸஹீஹா 1761 இன் விளக்கம்)

عَلَيْكُمْ بِالْأَمْرِ الْأَوَّلِ الَّذِيْ كَانُوا عَلَيْهِ قَبْلَ أَنْ يَفْتَرِقُوا

"(முஸ்லிம்கள்) தங்களுக்குள் பிரிவினை ஏற்படும் முன்பு, ஆரம்பத்தில் அவர்கள் எதன் மீது இருந்தார்களோ, அதனைப்

5

நபிவழியைப் புறக்கணித்து குர்ஆனை மட்டும் சார்ந்திருப்பது கூடாது

✿

நபிவழியைப் பின்பற்றாமல் குர்ஆனை மட்டும் தனியாகப் பின்பற்றுவது மாபெரும் வழிகேடு. வழிகெட்ட கூட்டங்களில் பெரும்பாலானவை தாங்கள் குர்ஆனை உறுதியோடு பின்பற்றுவ தாக வாதிப்பதைப் பார்க்கலாம். பொய்யான விளக்கங்களையும் திரிக்கப்பட்ட அர்த்தங்களையும் சார்ந்தே அவர்கள் இருப்பார்கள்.

தொழுகை, ஸகாத், ஹஜ்ஜு இவற்றை எப்படிச் செய்வதென்று குர்ஆனில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளதா என்ன..? இல்லையே! ஆக, குர்ஆனை நபிவழியின் வெளிச்சத்தில்தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வின் கட்டளைகள் எப்படி நம்மைக் கட்டுப்படுத்துமோ, அதுபோலவே நபி ﷺ அவர்களுடைய கட்டளைகளும் நம்மைக் கட்டுப்படுத்துபவை என்று ஒரு முஸ்லிம் அவசியம் அறிந்திருக்க வேண்டும். ஒரு நபிமொழி எச்சரிக்கிறது.

أَلاَ هَـلْ عَسَى رَجُلٌ يَبْلُغُهُ الْحَدِيـثُ عَنِّي وَهُوَ مُتَّكِئٌ عَلَى أَرِيكَتِهِ فَيَقُـولُ بَيْنَنَا وَبَيْنَكُمْ كِتَابُ اللهِ فَمَـا وَجَدْنَا فِيهِ حَلاَلاً اسْـتَحْلَلْنَاهُ وَمَا وَجَدْنَـا فِيهِ حَرَامًا حَرَّمْنَاهُ وَإِنَّ مَا حَرَّمَ رَسُولُ اللهِ كَمَـا حَرَّمَ اللهُ

அறிந்துகொள்ளுங்கள்: ஒரு மனிதனுக்கு என்னுடைய ஹதீஸ் தெரிய வந்தபின், அவன் தன் சாய்விருக்கையில் உட்கார்ந்தபடி, "உங்களுக்கும் எங்களுக்கும் மத்தியில் அல்லாஹ்வின் வேதம் இருக்கிறது. எதையெல்லாம் அதில் ஹலால் என்று பார்க்கி றோமோ, அதையெல்லாம் ஹலாலாகவே கருதுவோம். எதை யெல்லாம் அதில் ஹறாம் என்று பார்க்கிறோமோ, அதையெல்லாம் ஹறாம் ஆக்குவோம்" என்று சொல்லும் நிலை ஏற்பட வேண்டாம்.

6

நபித்தோழர்களிடம் பெற்றது நிச்சயமாகக் குர்ஆனிலிருந்தே பெற்றதுதான்

✿

ஸஹாபாக்கள் (நபித்தோழர்கள்), நான்கு கலீஃபாக்களிடமிருந்து பெற்றார்கள். அவர்கள் அனைவரும் நன்மையின் மீது பேராசை கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்களின் ஈமானுக்கு அல்லாஹ் சாட்சி சொல்கிறான். அவர்கள் பாதை அல்லாத வேறு பாதையைப் பின்பற்றக் கூடாது என்று நம்மை எச்சரிக்கிறான்.

وَمَنْ يُشَاقِقِ الرَّسُولَ مِنْ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُ الْهُدَى وَيَتَّبِعْ غَيْرَ سَبِيلِ الْمُؤْمِنِينَ نُوَلِّهِ مَا تَوَلَّى وَنُصْلِهِ جَهَنَّمَ وَسَاءَتْ مَصِيرًا

எவர் நேரான பாதை இன்னதென்று தனக்குத் தெளிவானதன் பின்னரும் இந்தத் தூதரை விட்டுப் பிரிந்து, விசுவாசிகளின் பாதை அல்லாததில் செல்கிறாரோ, அவரை நாம் அவர் செல்லும் பாதையிலேயே செல்லவிட்டு, பின்னர் அவரை நரகத்தில் சேர்த்துவிடுவோம். அது செல்லும் இடங்களில் மிகக் கெட்டது. *(அல்குர்ஆன் 4:115)*

நபிமொழி ஒன்று சொல்கிறது:

أَلاَ إِنَّ مَنْ قَبْلَكُمْ مِنْ أَهْلِ الْكِتَابِ افْتَرَقُوا عَلَى ثِنْتَيْنِ وَسَبْعِينَ مِلَّةً وَإِنَّ هَذِهِ الْمِلَّةَ سَتَفْتَرِقُ عَلَى ثَلاَثٍ وَسَبْعِينَ ثِنْتَانِ وَسَبْعُونَ فِي النَّارِ وَوَاحِدَةٌ فِي الْجَنَّةِ وَهِيَ الْجَمَاعَةُ

அறிந்துகொள்ளுங்கள்! வேதக்காரர்களில் உங்களுக்கு முன்னிருந்தோர் எழுபத்திரண்டு கூட்டங்களாகப் பிரிந்துவிட்டார்கள். நிச்சயமாக இந்தச் சமுதாயம் எழுபத்து மூன்றாகப் பிரியும். எழுபத்திரண்டு நரகில் இருக்கும். ஒன்று மட்டும் சுவர்க்கத்தில் இருக்கும். அதுதான் 'அல்ஜமாஆ'. (அறிவிப்பு: முஆவியா இப்னு அபீசுஃப்யான் ﷺ, சுனனு அபீதாவூது 4597, அஸ்ஸஹீஹா 204)

7

ஸுன்னத் ஒன்றா, இரண்டா ?

✿

ஸுன்னத், அதாவது நபிவழி ஒன்றுதான். எனவேதான், "அதை உங்கள் கடைவாய்ப்பற்களால் கவ்விப்பிடியுங்கள்" என்கிறார்கள் நபி ﷺ அவர்கள். 'அதை' என்று சொன்னால், ஒருமையைத்தான் குறிக்கும். இங்கு 'அவற்றை' என்ற பன்மை வரவில்லை. மேலும், இருமையைக் காட்டும் வார்த்தையும் இல்லை. 'அதை' என்பது ஒன்றையே குறிப்பிடுகிறது. எனவே, ஸுன்னத் ஒன்றே என்பது உறுதியாகிறது.

நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் ஸுன்னத்தைப் பின்பற்றுதல் என்றால், நபியவர்களது ஸுன்னத்தைப் பின்பற்றுதல் என்றே அர்த்தம். காரணம், அந்தக் கலீஃபாக்களின் ஸுன்னத், நபியவர்களது ஸுன்னத் தவிர வேறில்லை. அவர்கள் நபியவர்களைத்தாம் பின்பற்றினார்கள்.

ஷெய்க் அல்காரீ ﷺ தமது அல்மிர்காத் நூலில் சொல்கிறார்கள்: எனது வழிமுறைகளையும் எனக்குப் பின் வருகின்ற நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் வழிமுறைகளையும் பற்றிப்பிடியுங்கள் என்ற வாசகத்திற்கு விளக்கம், நேர்வழி பெற்ற கலீஃபாக்கள் எனது ஸுன்னத்தைச் செயல்படுத்துகிறார்கள் என்பதாகும். ஸுன்னத்தை அவர்களோடு இணைத்துச் சொன்னதிலிருந்து அவர்கள் அதைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள் அல்லது அதையே அவர்கள் தேர்வு செய்திருக்கிறார்கள் என்பதாகும். "அதைக் கடைவாய்ப்பற்களால் கவ்விப்பிடியுங்கள்" என்ற சொல்வழக்கு, ஸுன்னத்தை உறுதியாகப் பற்றிப்பிடியுங்கள் என்பதை இலக்கியமாகச் சொல்வதற்கு வந்துள்ளது. கூடவே, உறுதியாகப் பற்றிக்கொள்வதற்கு மிகத் தகுதியான ஒன்றுக்குரிய கட்டளையாகும் இது.

இன்று எத்தனையோ வழிமுறைகள் உண்டாகிவிட்டன. இருப்பினும், வெற்றிக்கான ஒரே வழி, நபிவழியையும் நேர்வழி சென்ற

8

முஸ்லிம்கள் ஏராளமான கருத்து வேறுபாடுகளில் இருக்கும் காலத்தில், பித்அத்கள் குறித்து நம் நிலைப்பாடு என்ன ?

✿

இன்று பல போலி மேதாவிகளும் அவர்களைப் போன்றவர்களும், "இந்த விஷயத்தையெல்லாம் ஓரமாக வையுங்கள்; இதையெல்லாம் பேசுவதற்குரிய நேரம் இதுவல்ல" என்கிறார்கள். இன்னும் பலரோ, "பித்அத்கள் பற்றி பேசுவது முஸ்லிம்களை மேலும் பிளவுபடுத்தும்" என்கிறார்கள்.

அல்லாஹ்வின் தூதர் ﷺ நமக்குச் சொல்லிக் கொடுத்திருப்பதோ, இவர்களின் சொல்லுக்கு நேர் எதிரானது. நம்மிடையே கருத்து வேறுபாடுகளும் பிளவுகளும் ஏற்பட்டால், நாம் பித்அத்களை விட்டுவிட வேண்டும் என்பதே நபியவர்களின் கட்டளை.

"உங்களில் எனக்குப் பின் வாழ்கிறவர், அதிகமான கருத்து வேறுபாடுகளைப் பார்ப்பார்" என்று சொல்வதுடனே சேர்த்து, "புதிய காரியங்கள் விஷயத்தில் எச்சரிக்கையாக இருங்கள்" என்றும் சொன்னார்கள். இங்கு ஒன்றைக் கவனத்தில் நிறுத்த வேண்டும்.

குர்ஆனிலும் நபிமொழியிலும் தெளிவாகிவிட்ட ஒன்றுக்கு இஜ்திஹாது (சுய திறனாய்வு) கூடாது. பித்அத்தைப் பற்றிப் பேசுவது முஸ்லிம்களைப் பிளவுபடுத்தும் என்ற அவர்களது சொல்லின் மூலம் அவர்கள் அந்தக் கூடாத இஜ்திஹாதில்[8] இறங்கி விட்டார்கள்.

---

8 இஜ்திஹாத் (اِجْتِهَاد): குர்ஆன், நபிவழி குறித்து ஆழமான கல்விகொண்டவர், ஏதேனும் ஒரு விவகாரத்திற்குத் தீர்ப்பு வேண்டி குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களை ஆய்வுசெய்து பெரும் முயற்சி எடுப்பது.

9

பித்அத்களில் நல்லவை, கெட்டவை என்று வகைப்படுத்தியவர்களுக்கு மறுப்பு

✿

சிலர் பித்அத்களில் நல்ல பித்அத், கெட்ட பித்அத் உண்டு என்பார் கள். நான் சொல்கிறேன், நீங்கள் விரும்பினால் அழகான பித்அத், அசிங்கமான பித்அத் என்று சொல்லிக்கொள்ளுங்கள். ஆனால், அல்லாஹ்வின் தூதர் ﷺ சொல்லியதை மறந்துவிடாதீர்கள்:

وَكُلَّ بِدْعَةٍ ضَلاَلَةٌ وَكُلَّ ضَلاَلَةٍ فِي النَّارِ

"நிச்சயமாக ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடு. ஒவ்வொரு வழிகேடும் நரகத்தில்தான்." (அறிவிப்பு: ஜாபிர் இப்னு அப்துல் லாஹ் ؓ, சுனனுன் நஸாயீ 1578, ஸஹீஹுல் ஜாமிஉ 2233)

நல்ல பித்அத், கெட்ட பித்அத் என்று நீங்கள் சொல்லும் எது வானாலும், அது அல்லாஹ்வின் தூதர் சொல்கிற 'ஒவ்வொரு' என்ற விசாலமான வார்த்தைக்குள் அடங்கிவிடும்.

كُلُّ بِدْعَةٍ ضَلاَلَةٌ وَإِنْ رَآهَا النَّاسُ حَسَنَةً

"ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடுதான், மக்கள் அதை நன்மை யாகக் கருதிச் செய்தாலும் சரியே" என்கிறார்கள் இப்னு உமர் ؓ. (லாலிகாயீ எழுதிய ஷரஹ் உசூல் இஃதிகாத் அஹ்ல் அஸ் ஸுன்னா வல்ஜமாஆ 126)

ஒருவர், "பித்அத்களை ஒழிப்பதற்குரிய நேரம் இதுவல்ல; வழி கெட்ட கூட்டங்களிடம் போரிடுவதுதான் சிறந்தது" என்று சொன் னால், அது தவறு. இதற்குப் பல காரணங்கள் உண்டு.

1. பித்அத்களைத் தடுக்காமல் இருந்தால், அவை பரவிக்கொண்டே போவதுடன், எண்ணிக்கையிலும் பெருகிவிடும். நிறைய ஸுன்னத்துகளை அழித்துவிடும். இது வழிகேடுகள் அதிகரிக்கும் அபாயத்தை உண்டாக்கும். ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடு தான் என்பதை நினைவில் வையுங்கள்.

10

பித்அத்தின் அபாயம்

✿

مَنْ أَحْدَثَ فِي أَمْرِنَا هَذَا مَا لَيْسَ فِيهِ فَهُوَ رَدٌّ

நமது இந்தக் காரியத்தில் இதில் இல்லாத ஒன்றை யார் அறிமுகம் செய்கிறாரோ, அவருடைய காரியம் நிராகரிக்கப்படும். (அறிவிப்பு: ஆயிஷா ﵂, ஸஹீஹுல் புகாரீ 2697, ஸஹீஹ் முஸ்லிம் 1718)

மற்றோர் அறிவிப்பில்:

مَنْ عَمِلَ عَمَلاً لَيْسَ عَلَيْهِ أَمْرُنَا فَهُوَ رَدٌّ

எவர் நமது கட்டளை இல்லாமல் ஒரு செயலைச் செய்கிறாரோ, அவருடைய செயல் நிராகரிக்கப்படும். (அறிவிப்பு: ஆயிஷா ﵂, ஸஹீஹ் முஸ்லிம் 1718)

குர்ஆன், நபிவழியையும் நமது அஸ்ஸலஃபுஸ் ஸாலிஹ் உடைய பாதையையும் பின்பற்றாமல், அல்லாஹ்வின் நெருக்கத்தைத் தேடுவது மிகவும் அபாயகரமானது. அதோடு இச்செயல் அல்லாஹ் விதித்த கட்டுப்பாடுகளை முட்டாள்தனமான தைரியத்துடனும், கண்மூடித்தனத்துடனும் அத்துமீறி நடப்பதையே காட்டுகின்றன.

ஒருவனுடைய சுயநினைவு ஒரு டாலரையோ, பத்து டாலர்களையோ திருடுவதற்கு அனுமதிக்கிறது என்றால், அவன் ஆயிரக் கணக்கான டாலர்களைத் திருடும்போது கொஞ்சமும் மன உறுத்தலுக்கு உள்ளாக மாட்டான். பித்அத்வாதியின் நிலையும் இது போலத்தான். அவன் நபிவழியிலிருந்து திசைமாறிவிட்டதைத் திருப்தியாக ஏற்றுக்கொள்வதுடன், பித்அத்தை விரும்புகிறவனாகவும் ஆகிவிட்டால், அதற்குப் பின் பெரிய பித்அத்களை, சில நேரம் ஷிர்க்கைச் செய்வதுகூட அவனுக்குச் சர்வ சாதாரணமாகவே தெரியும். இப்படிப் பித்அத்தையும் வழிகேட்டையும் அங்கீகரிப்பதுதான், எல்லா வகையான வழிகேடுகளும் எளிதில் நுழைவதற்குக்